# <u>20.06.2021 தேதியிட்ட பொதுமுடக்கம் பற்றிய செய்தி வெளியீடு</u>

<u>(Lockdown press release dated 20.06.2021)</u>

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 28-06-2021 காலை 6-00 மணிவரை பொதுமுடக்கம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை வெளியிட்டுள்ளார் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். (இதன் **இணைப்பை** இங்கே பார்க்கவும்). நமது உள் விநியோக நிலையங்கள் செயல்படுவதில் குறிப்பிட்ட மாற்றங்கள் எதுவும் இல்லை; உணவகங்களில் இருந்து பார்சல் சேவை இப்போது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை செயல்பட முடியும்.

அத்துடன், சில பொதுவான தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் வருமாறு:

- தனியாக செயல்படுகின்ற மளிகை, பலசரக்குகள், காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்யும் கடைகள் காலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.
- காய்கறி, பழம் மற்றும் பூ விற்பனை செய்யும் நடைபாதைக் கடைகள் காலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.
- ஓட்டல்கள், உணவகங்கள் மற்றும் பேக்கரிகளில் பார்சல் சேவை மட்டும் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை அனுமதிக்கப்படும்.
- மின் வணிகம் (E-commerce) மூலம் உணவு விநியோகம் செய்யும் அனைத்து மின் வணிக நிறுவனங்கள் மேற்கண்ட நேரங்களில் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும்.
- இதர மின் வணிகச்சேவை நிறுவனங்கள் (E-commerce) அனைத்தும் காலை 06.00 மணி முதல் இரவு 09.00 வரை இயங்கலாம்.
- இனிப்பு மற்றும் காரவகை விற்பனை செய்யும் கடைகள் காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.
- வாகனங்கள் விற்பனை செய்யும் நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்களது கடைகள் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.
- நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, குற்றாலம் பகுதிகளுக்கு பயணிக்க அவசர காரணங்களுக்காக இ-பாஸ் மூலம் அனுமதிக்கப்படும்.
- 27 மாவட்டங்களுக்கு இடையில் இ-பாஸ் மூலம் திருமணங்களுக்கான பயணம் அனுமதிக்கப்படும்.
- அனைத்து அத்தியாவசிய அரசு துறைகளும் 100% ஊழியர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.
- பிற அரசு அலுவலகங்கள் 50% ஊழியர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.
- சார்-பதிவாளர் அலுவலகங்கள் முழுமையாக செயல்பட அனுமதிக்கப்படும்.
- அனைத்து தனியார் நிறுவனங்களும் 33% ஊழியர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.
- ஏற்றுமதி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்களுக்கான பொருட்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் 100% ஊழியர்களுடன் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படுகின்றன. மற்ற தொழிற்சாலைகள் 33% ஊழியர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும். தொடர்புடைய நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றப்பட வேண்டும்.
- மின் பொருட்கள், பல்புகள், கேபிள்கள், சுவிட்சுகள், ஒயர்கள் விற்கும் கடைகள் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படுகின்றன.
- தொடர்புடைய நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, அனைத்து வகையான கட்டுமானங்களும் அனுமதிக்கப்படும்.
- பள்ளி, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி மையங்களில் மாணவர் சேர்க்கை தொடர்பான நிர்வாகப் பணிகள் அனுமதிக்கப்படும்.
- காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை விளையாட்டு பயிற்சி அளிப்பதற்கு அனுமதி.
- காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்வையாளர்கள் இல்லாமல் திறந்தவெளி விளையாட்டு அனுமதிக்கப்படும்.

முகக்கவசங்களை அணிதல், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போதும், பொது இடங்கள்/வசதிகளில் மனித இடைவெளியைப் பராமரித்தல், அவ்வப்போது கைகளை சோப்புப் போட்டுக் கழுவுதல் அல்லது சானிட்டைசரைப் பயன்படுத்துதல் போன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தொடர்ந்து பயன்படுத்தவேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

அனைவருக்கும் வாழ்த்துக்கள். *செயற்குழு (அனு, அருண், சாலி, ஹேமந்த், பார்த்தா, சவ்ரோ, ஸ்ரீமாயி)*